DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்கிழமை 02ம் நாள் சாட்சியாகிய கார்த்திகேயன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | வயது | 37 |
| த/பெ. | முனுசாமி | இனம் | ஆண் |
| கிராமம் | சாலை | தொழில் | கடை வைத்துள்ளேன் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 136/2018**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**முதல் விசாரணை 02.09.2024 அ.சா.3**

1. நான் சாலை கிரமாத்தில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்து போன முனுசாமி எனது தந்தை. 16.08.2018ம் தேதி மதியம் 02.30 மணிக்கு அரக்கோணத்தில் இருந்து எனது தந்தை இருசக்கர வாகனத்தில் வந்தபோது சாலை கிராமத்திற்கு 1 கி.மீ வந்தபோது பின்பக்கமாக வந்த பொலீரோ லோடு வாகனம் எனது தந்தையின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2. எனது தந்தைக்கு தலையின் பின்பக்கம் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நான் எனது டாடா ஏசி வாகனத்தில் எனது தந்தையின் உடலை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றேன். மருத்துவமனையில் பரிசோதனை செய்து பார்த்து எனது தந்தை இறந்குவிட்டதாக சொன்னார்கள்.

3. பிறகு பிரேத பரிசோதனை செய்தார்கள். நான் மருத்துவமனையில் உடன் இருந்தேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிவந்த நபர் நீதிமன்றத்திற்கு வரவில்லை. **(சாட்சி, எதிரியை அடையாளம் காட்டவில்லை).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எனக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பொலீரோ வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. இறந்தவர் எனது தந்தை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Sd/- K.Ramkumar., M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam.